# <u>UNIT IV</u>

## Election Geography, Geography of Elections- Geography of campaigning, voting pattern, voter's participation- Gerry maundering- Election commission

தேர்தல் புவியியல் என்பது தேர்தலை மையப்படுத்தி அதற்கான புவியியல் காரணிகளைத் தொடர்புபடுத்தி அறிவது ஆகும்.

<u>புவியியல் தேர்தல்:</u>

புவியியல் தேர்தலானது வெவ்வேறு செயல்பாடுகளால் தீர்மானிக்கப்படுகின்றது, என்பதை புவியலின் மூலமாக அறிவதாகும்.

<u>முகாமிடல்:</u>

தேர்தல் களம் வரும் முன்னரே முகாமில் பல்வேறு அரசியல் கட்சிகளாலும் தனித்தனியே ஆரம்பிக்கப்படுகிறது.

மேலும் அவை பல சூழ்நிலை காரணமாக

1). காலநிலை, வெப்பநிலை, மழைப்பொழிவு

2). இயற்கைசீற்றங்கள், நிலநடுக்கம், எரிமலைவெடிப்பு, வெள்ளம் போன்ற இடர்பாடுகள் காரணமாக தேர்தல் நாளை தீர்மானிக்க இவ்வகை நிகழ்வுகளை கொண்டு தீர்மானிக்கப்படுகிறது பற்றி அறிவது மிகவும் அவசியமாகும்.

மேலும் தேர்தலுக்கான முன் ஏற்பாடுகள் முன்னரே தீர்மானிக்க இவ்வகை காரணிகளைப் பற்றி அறிவது மிகவும் அவசியமாகும்.

<u>தேர்தல் முகாமிடலில் உள்ள படிநிலைகள்</u>:

1).முன்னேற்பாடு

2).பார்வையிடல்

3).தயார்படுத்துதல்

1).தேர்தலை நடத்தும் அதிகாரிகள் தேர்தல் நடக்கும் இடங்களுக்குச் சென்று அவ்விடங்களை ஆய்வு செய்யவேண்டும்.

2).பார்வையிடல் என்பது தேர்தலுக்கான இடங்களை திட்டமிடுதல் அவ்வாறு திட்டமிட்ட இடங்களை ஆராய்ந்து சரியாக திட்டமிட்ட இடங்களை தேர்தலுக்கு தயார்படுத்துதல்.

3).தேர்தலுக்கு முன்னர் தேர்தல் முகாமிலுள்ள வசதிகள் குறைகள் ஏதேனும் இருப்பின் அதனை உடனடியாக சரி செய்து தேர்தலுக்கு தேவையான அனைத்து உபகரணங்கள் மற்றும் தேர்தல் அலுவலர்களுக்கு தேவையான முன்னேற்பாடுகளை சீராக செய்து முன்னேற்பாடுகளை தயார்படுத்தலில் அடங்கும்.

<u>பாரம்பரியகாரணிகள்</u>

பாரம்பரிய அணுகு முறை

- பாரம்பரிய
- நிலவரைபடவியல்

Physical basics-இயற்கைகூறுகள்

Economic basics - பொருளாதாரக்கூறுகள்


Social basics - சமூகக்கூறுகள்

Electoral basics - ஒட்டுமொத்தஓட்டு

1).மண்ணியல்- உயரவேறுபாடு

2).தொழிற்சாலை மற்றும் வேளாண்மை


3).மக்கள் தொகை மற்றும் குடியிருப்புப் பகுதிகள்.




### கெர்ரிமாண்டரிங்

கெர்ரிமாண்டரிங் என்பது தேர்தல் மாவட்டங்களை\தொகுதிகளை பிரிக்கும் போது குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கு அல்லது குழுவுக்கு ஏற்றவாறு எல்லைகளை

வகுப்பது ஆகும். இவ்வாறு பிரிக்கப்படும் தேர்தல் மாவட்டங்கள்\தொகுதிகள் கெர்ரிமாண்டர் எனப்படும். கெர்ரிமாண்டரிங் எனப்படுவது எதிர்மறை பொருள் உடையது. இதில் உடைப்பது, சேர்ப்பது என்ற இரு முறைகள் பயன்படும்.




அடிப்படை நிலையில்(புரிதலுக்காக) கெர்ரிமாண்டரிங் பிரிக்கப்படும் வரைபடம்.

அரசியல் நிலை, மக்களின் இனம், நிறம், மொழி, வர்க்கம், மத நம்பிக்கைகள் போன்ற குறிப்பிட்ட மக்கள்தொகை பரம்புதலின் படி குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கு உதவும் வகையிலோ அதற்கு பாதகம் ஏற்படுத்தும் வகையிலோ கெர்ரிமாண்டரிங் இருக்கும். குறிப்பாக அமெரிக்காவில் ஆப்பிரிக்க அமெரிக்கர்கள் அல்லது மற்ற இன சிறுபான்மையினர் பெருபான்மையாக உள்ள தேர்தல் மாவட்டங்கள்\தொகுதிகள் "பெரும்பான்மையாக சிறுபான்மையினர் உள்ள மாவட்டங்கள்" என பிரிக்கப்பட்டுள்ளதை இதற்கு காட்டாக கூறலாம்.

## இந்தியத் தேர்தல்கள்

<u>இந்தியக் குடியரசு</u>

இந்தியக் குடியரசு உலகில் உள்ள மக்களாட்சி நாடுகளில் அதிக மக்கள் தொகை கொண்டதாகும். 18 வயது நிரம்பிய அனைத்து இந்தியக் குடிமக்களுக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளது. 2009ம் ஆண்டு கணக்கின்படி 71.4 கோடி பேர் இந்தியாவில் வாக்குரிமை பெற்றிருந்தனர்.

இந்திய நாடாளுமன்றத்தின் கீழவையான மக்களவை, மாநில சட்டமன்றங்களுக்கும், உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றுக்கு நேரடித் தேர்தல்கள் நடைபெறுகின்றன. ஒரு வாக்காளருக்கு ஒரு வாக்கு என்ற விதிப்படி இத்தேர்தல்கள் அமைகின்றன. வேட்பாளர்களும் அதிக வாக்குகளைப் பெற்றவர் (plurality) வெற்றி பெறுகிறார். நாடாளுமன்றத்தின் மேலவையான மாநிலங்களவை உறுப்பினர்கள், இந்தியக் குடியரசுத் தலைவர், இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் ஆகியோர் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. மாறாக நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

தேசிய அளவில் தேர்தல்களை இந்தியத் தேர்தல் ஆணையம் நடத்துகிறது. இது ஒரு தன்னாட்சி பெற்ற அமைப்பு. இது தவிர மாநில அளவிலான தேர்தல்களை நடத்த மாநிலந்தோறும் இதன் கீழ் மாநில தேர்தல் ஆணையங்கள் செயல்படுகின்றன. 20ம் நூற்றாண்டின் இறுதிவரை வாக்குச்சீட்டுகளை பயன்படுத்தி தேர்தல்கள் நடத்தப்பட்டன. தற்போது பெரும்பாலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களைப் பயன்படுத்தி நடத்தப்படுகின்றன.

## இந்தியத் தேர்தல் ஆணையம்

இந்தியத் தேர்தல் ஆணையம் (Election Commission of India) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தால் நிறுவப்பெற்ற ஒரு அமைப்பு. தன்னாட்சி பெற்ற இவ்வமைப்பு பகுதியளவு நீதித்துறை போன்றது. இதன் பணி மக்கள் மன்றங்களுக்கான பெயராட்சி உறுப்பினர் தேர்தல்களை நடுநிலையோடு நடத்துவதாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டம் இவ்வாணையத்திற்கு இந்தியக் குடியரசுத் தலைவர், இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர், மாநில சட்டப் பேரவைகள் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்தவும், மேற்பார்வையிடவும் பணித்துள்ளது. இது தொடர்பான சட்டம் மக்கள பிரதிநிதித்துவ சட்டம், 1950 (Representation of People Act, 1950) ஆகும்.

<u>தேர்தல் செலவுக்கான உச்சவரம்பு</u>

மாநிலத்தின் அளவு, தொகுதியின் அளவு, வாக்காளர்களின் எண்ணிக்கை என்று எதையுமே கணக்கில் கொள்ளாமல் மக்களவை தொகுதிக்கு ரூ.70 இலட்சமும், சட்டப் பேரவைத் தொகுதிக்கு ரூ.29 இலட்சமும் ஒரு வேட்பாளர் செலவு செய்யலாம் என்று மத்தியத் தேர்தல் ஆணையம் வரம்பு விதித்துள்ளது.

**இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர்**

**இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர்**- இந்தியத் தேர்தல் ஆணையத்தின் தலைவர், இந்தியாவின் தேர்தல்களை நேர்மையாக, விருப்புவெறுப்பின்றி, எவ்வமைப்பையும் சாராமல் நடத்துவதற்கு வழிவகை செய்பவர்.

இந்தியக் குடியரசுத் தலைவரால் தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் *இரு தேர்தல் ஆணையர்கள்* நியமனம் செய்யப்படுகின்றனர்.

தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து *6 ஆண்டுகள் அல்லது 65 அகவை (வயது) நிறைவுறும் வரை எது முன் நிகழ்கின்றதோ* அதைப் பொருத்து இவர்கள் பணிக்காலம் கணக்கிடப்படுகின்றது.

இந்தியத் தலைமை நீதிபதிகளின் படிநிலையில் கருதப்படும் இவர்கள் ஊதியமும் அவர்கள் அளவிற்கு ஈடாகப் பெறுகின்றனர்.

தலைமைத் தேர்தல் ஆணையரை **நடத்தை விதி மீறலைக்** (இம்பீச்மென்ட்) காரணம்காட்டி நாடாளுமன்றத்தில் அவர் மீது கொண்டுவரப்படும் தீர்மானத்தின் வாக்கெடுப்பில் (ஒட்டெடுப்பில்) தீர்மானம் வெற்றிபெற்றாலின்றி அவரை வேறு **எவ்வகையிலும் பணியிலிருந்து நீக்கவியலாது**. இதன் அதிகாரக் கட்டமைப்பில் சில மாற்றங்கள் கொண்டுவரப்பட்டு இவ்வாணையத்திற்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

உலகநாடுகளுடன் ஒப்பிடும் பொழுது, இந்தியாவே முதன் முதலாக முழுவதும் மின்னணு எந்திரத்தின் மூலம் பொதுத்தேர்தலை நடத்திக்காட்டியது. இவ்வாணையத்தின் மீது மக்கள் பார்வை விழக் காரணமாயிருந்தவர் முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் டி. என். சேஷன். அவர் 1990 முதல் 1996ஆம் ஆண்டு வரை பணிபுரிந்தார்.

**இந்திய தேர்தல் ஆணையாளர்**

இந்திய தேர்தல் ஆணையாளர் என்பவர் இந்திய தேர்தல் ஆணையத்தின் உறுப்பினராவார், அரசமைப்பின்படி இவர் சார்பற்ற சுதந்திரமான முறையில் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற தேர்தல்களை நடத்துவது இவரது பணியாகும். பொதுவாக இந்திய ஆட்சிப்பணியில் இருந்து ஓய்வு பெறுபவரே தேர்ந்தெடுக்கபடுவார்

1989ம் ஆண்டு வரை ஒரு நபர் ஆணையமாக இருந்து பின்னர் மூன்று நபர்களை கொண்ட ஆணையமாக மாற்றப்பட்டது. முடிவுகளின் போது பெரும்பாண்மை கருத்து அங்கீகரிக்கப்படுகிறது. தற்போதைய தலைமை ஆணையராக ஓம் பிரகாசு ராவத் இணை ஆணையர்களாக சுனில் அரோரா மற்றும் அசோக் லவாசா ஆகியோர் பதவி வகிக்கின்றனர்.

நியமனம் மற்றும் நீக்கம்

சாதாரண அரசியல் காரணங்களுக்காக தலைமை தேர்தல் ஆணையாளரை நீக்க இயலாது. நீக்கும் அதிகாரம் பாராளுமண்றத்தின் இரு அவைகளிலும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பாண்மை பெற்றால் மட்டுமே தகுதி இழக்க செய்ய முடியும். மற்ற இரு ஆணையாளர்களை நீக்க பரிந்துரைக்கும் அதிகாரம் குடியரசுத்தலைவருக்கு உண்டு.

ஊதியம்

தேர்தல் ஆணையாளர்கள் பொதுவாக ஓய்வு பெற்ற இந்திய ஆட்சி பணியாளர்களாக இருப்பதால் உச்ச நீதிமன்ற நீதிபதிக்கு ஒப்பான வகையில் ஊதியம் மற்றும் சலுகைகள் வழங்கப்படுகிறது.

***************************